MAALAI MALAR

20 DEC 2022

PAGE 4






கருத்தரங்கை கவர்னர் தமிழிசை, அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். அருகில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மித் சிங் உள்ளார்.

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# சர்வதேச கருத்தரங்கம்

## கவர்னர் தமிழிசை தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, டிச.20— புதுவை பல்கலைக்கழக சுப்ரமணிய பாரதியார் தமிழ் ஆய்வு மையம் மற்றும் பாலக்காடு, தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சி மையம் சார்பில் ஸ்ரீ வானவில் கே. ரவி 100—வது கருத்தரங்கு புதுவை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகை விடுதியில் நடந்தது.

கவர்னர் தமிழிசை கருத்தரங்கத்தை குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர். குர்மீத் சிங், அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. , பாலக்காடு தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் ராஜாராம், சுப்ரமணிய பாரதியார் தமிழ் ஆய்வு மையத்தின் புல முதல்வர் சந்திரிகா, அறிஞர்கள் கலந்து கொண்டனர்.